ஆயத்தமாக இருப்பவனுக்கு மோட்சத்தில் ஒரு வீடு ஆயத்தமாக இருக்கிறது. அவனுக்கு ஒரு வீட்டை ஆயத்தம் பண்ணவே, தான் போவதாக அவனுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறி இருக்கிறார் (யோவான் 14:2).

கைகளால் கட்டப்படாத ஒரு நித்திய வீடு அவனுக்குப் பரலோகத்தில் காத்திருக்கிறது. கொஞ்சமும் பயமின்றி அவன் கர்த்தருடைய வருகைக்குக் காத்திருக்க முடியும். ஆயத்தமாக இருப்பவர்கள் அவரோடு ஆட்டுக்குட்டியின் கலியாண விருந்தில் பிரவேசிப்பார்களென்று அவன் அறிந்திருக்கிறான். தேவனுடைய ராஜ்யத்தில் வீடு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். ஓ! உன் சொந்த ஆத்துமாவிடம் கருணை காட்டு! உன்னிலுள்ள அந்த நித்தியமான பகுதிக்கு இரக்கம் காட்டு. இந்த உலகின் காரியங்களுக்காக அதனுடைய முக்கியத்தை அசட்டை பண்ணி விடாதே! வியாபாரம், களியாட்டு, பணம், நாட்டு நடப்புகள் எல்லாமே ஒரு நாள் முடிந்து போகும். நான் கேட்கும் கேள்வியைக் குறித்து நினைக்க மறுக்காதே.
நீ ஆயத்தமா?
நீ ஆயத்தமாக இல்லை என்றால், தாமதிக்காமல் ஆயத்தபடு என்று உன்னை அவசரப்படுத்துகிறேன்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உன்னிடம் ஒன்று சொல்லுகிறேன். உன் இரட்சிப்புக்கான யாவுமே தேவனைப் பொருத்தவரையில் ஆயத்தமாக இருக்கிறது. பிதா உன்னை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருக்கிறார். கர்த்தராகிய இயேசு உன் பாவங்களைக் கழுவ ஆயத்தமாக இருக்கிறார். ஆவியானவர் உன்னைப் புதுப்பிக்க ஆயத்தமாக இருக்கிறார்; தேவதூதர் உன்னிமித்தம் களிகூர ஆயத்தமாக இருக்கிறார்கள், விசுவாசிகள் உனக்கு வலது கரம் கொடுக்க ஆயத்தமாக இருக்கிறார்கள்.

**ஓ! நீ ஏன் இன்றேஆயத்தமாகக் கூடாது? பிதா உன்னை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருக்கிறார்.**

**விநியோகிப்பவர் முகவரி**

ARE YOU READY? (Tamil)


*எங்கள் முகவரி:*
**இந்திய வேதாகம இலக்கியம் (IBL)**
67, பெராக்கா சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.
Phone : 044 26425166 / 26420077
Email : *ibl.maa@iblchennai.org*
Website: www.iblministries.in


# நீ ஆயத்தமா?

# இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு நீ ஆயத்தமா?

ஒரு நாள் கிறிஸ்து இந்த உலகத்திற்குத் திரும்பவும் வருவார். 2000 வருடங்களுக்கு முன் எப்படி அவர் வந்தாரோ, அவ்வண்ணமே, இரண்டாம் முறையும் நிச்சயமாய்த் திரும்ப வருவார்.

இயேசுவின்மேல் விசுவாசம் வைத்து, உலகில் அதை அறிக்கை செய்து வாழ்ந்த அவரது எல்லா ஜனங்களுக்கும் பலனளிக்க அவர் வருவார். அவரது எதிரிகளையும், கவலையீனமான வாழ்க்கை வாழ்ந்தவர்களையும், தேவனற்றவர்களையும், மனந்திரும்பாதவர்களையும், அவிசுவாசிகளையும் தண்டிக்க வருவார். ஒருவரும் நினையாத நேரத்தில் ஒரு திருடனைப்போல சடுதியாக அவர் வருவார்.

அவரது பிதாவின் மகிமையோடே அவரது பரிசுத்த தூதர்களோடே, பயப்படத்தக்க ராஜரீகத்தோடே அவர் வருவார். அவருக்கு முன் எரிந்துகொண்டிருக்கிற அக்கினி போகும்–

மரித்தோர் எழுப்பப்படுவார்கள். நியாயத்தீர்ப்பு ஆயத்தமாகும் – ஜீவ புத்தகம் திறக்கப்படும்! சிலர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

அநேக மக்கள் நரகத்தில் தள்ளப்படுவார்கள். மனந்திரும்புகிற நாட்கள் முடிந்துபோகும். அநேகர் "ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டும்" என்று கதறுவார்கள். ஆனால், கிருபையின் வாசல், நித்தியமாக மூடப்படும். இரண்டாம் தருணம் இனி இல்லை. இன்று கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இருக்குமானால், நீ ஆயத்தம்தானா? "இது ஒரு மிக முக்கியமான கேள்வியாகும். இது நீ உன்னை ஆராய்ந்து பார்க்கவும், உன் நினைவுகளைத் தூண்டி விடவும் பயன் படட்டும். திடீரென்று இவை நடப்பதால் மிகவும் பயங்கரமாக இருக்கும். ஜீவனுள்ள தேவனுடைய கரங்களில் விழுவது பயங்கரமாயிருக்கும். ஆனால், நான் உன்னை இந்த இடத்தில் விட்டு விடுவேனா? உன் இருதயத்தில் கேள்விகளை எழுப்பிவிட்டு, உனக்கு வழி காட்டாமலிருப்பேனா? ஆயத்தமாக இருக்கிற ஒரு மனுஷனை உனக்குக் காட்டுகிறேன்.

ஆயத்தமாக இருக்கிற ஒருவனுக்கு ஒரு இரட்சகர் உண்டு. அவனுக்கு எப்போது வேண்டுமானாலும் உதவி செய்ய இயேசு இருக்கிறார். அவன் தேவகுமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறான், தான் ஒரு பாவி என்பதை உணர்ந்து, சமாதானத்துக்காக கிறிஸ்துவிடம் ஓடி வருகிறான். தன் ஆத்துமாவையும் ஆத்துமாவைக் குறித்த சகல காரியங்களையும் கிறிஸ்துவினிடத்தில் ஒப்படைக்கிறான். ஆண்டவர் திரும்ப வரும்பொழுது, அவன் எதற்கும் பயப்படத் தேவை இல்லை. அவன் பாவங்களைக் கழுவின அந்த இயேசுவே, நியாயாதிபதியாக வருவார்.

**நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷ குமாரன் வருவார். ஆகவே, நீங்களும் ஆயத்தமாயிருங்கள். மத்தேயு 24:44**